


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜூன் 27, 2019 | புரட்சி 18 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00


# வைக்கம் போர்: கொச்சைப்படுத்தும் பார்ப்பனர்கள்

பெரியார் வைக்கம் போராட்டத்தில் இறுதி கட்டத்தில்தான் பங்கேற்றார் என்றும், வைக்கம் போராட்டத்தின் முழு பெருமையும் பெரியார் மீது ஏற்றிக் காட்டப்படுகிறது என்றும் பெரியாருக்கு எதிராகப் பேசுவதற்காகவே கிளம்பியுள்ள ஒரு கூட்டம் தொடர்ந்து பேசியும் எழுதியும் வருகிறது. ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் குருமூர்த்தி நடத்தி வரும் ‘துக்ளக்’ ஏடும் (26.10.2016) அதையே இப்போதும் எழுதி, அதில் ஒரு அற்ப மகிழ்ச்சி அடைகிறது.

மாதவன் என்ற அப்போதைய ‘தீண்டப்படாத’ சமூகமான ஈழவ சமூகத்தைச் சார்ந்த வழக்கறிஞர், வைக்கம் கோயில் வீதிகளைக் கடந்து நீதிமன்றம் சென்றபோது தடுக்கப்பட்டார். கேரள காங்கிரஸ் தலைவர்கள் கோயிலைச் சுற்றிய வீதிகளில் நடமாடும் உரிமைகளை மறுக்கும் தீண்டாமையை எதிர்த்துப் போராட்டம் நடத்துவது என கேரள காங்கிரஸ் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் 16.2.1924. கேசவமேனன், ஜார்ஜ் ஜோசப் போன்ற 19 தலைவர்கள் போராட்டத்தைத் தொடங்கிய நாள் 30.3.1924. 6 மாதம் தண்டனை தரப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து, போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் தகுதி கொண்ட தலைவர் ஈ.வெ. இராமசாமி தான் என்று முடிவு செய்து குரு நீலகண்டன் நம்பூதிரி, பெரியாரை உடனடியாக வைக்கத்துக்குப் புறப்பட்டு வரச் சொல்லி தந்தி கொடுத்த நாள் 4.4.1924 மற்றும் 12.4.1924. மட்டுமின்றி, பாரிஸ்டர் கேசவ மேனனும், ஜார்ஜ் ஜோசப்பும் பெரியாருக்கு கடிதமும் எழுதவே, பெரியார் உடனடியாகப் புறப்பட்டு வைக்கத்தை அடைந்த நாள் 13.4.1924. அதாவது கிளர்ச்சி தொடங்கிய இரண்டே வாரத்தில் பெரியார் வைக்கம் சென்று கிளர்ச்சிக்கு தலைமை தாங்குகிறார். பெரியார் கடைசி கட்டத்தில் போராட்டத்தில் பங்கேற்றார் என்று பார்ப்பனர்கள், சில பார்ப்பன தாசர்கள் உண்மைக்கு மாறாகப் பொய்யைக் கட்டவிழ்த்து வருகிறார்கள்.

அருவிக்குத்தி சிறையில் முதலில் ஒரு மாதம் அடைக்கப்பட்ட பெரியார், விடுதலையாகி மீண்டும் போராட்டத்தைத் தொடங்கிய நிலையில் திருவிதாங்கூர் சிறையில் 6 மாதம் அடைக்கப்பட்டார்.

“ஒரு ஜாதி இந்து என்று சொல்லக்கூடிய நிலையிலே உள்ள ஒருவர், கேரளத்தில் உள்ள தீண்டத்தகாத மக்களுக்கு உரிமை வாங்கிக் கொடுப்பதற்காக செய்த தியாகம் நமக்குப் புதுவாழ்வு தந்திருக்கிறது” என்று இந்தப் போராட்டத்தைத் தொடங்கி வைத்த தலைவர்களில் ஒருவரான கே.பி. கேசவமேனன், தனது சுயசரிதையில் எழுதியிருக்கிறார்.

அப்போது சென்னை மாகாணத்தில் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலின் பிரதிநிதியாக இருந்த சி.டபிள்யூ இ காட்டன் எனும் அய்.சி.எஸ். பிரிட்டிஷ் அதிகாரி, சென்னை மாகாணத் தலைமைச் செயலாளருக்கு 1924, ஏப்.21ஆம் தேதியிட்டு ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

“சத்தியாகிரக இயக்கத்துக்கு திருவாங்கூருக்கு வெளியில் உள்ளவர்களின் உதவி கிடைக்காதிருந்தால் அது வெகு நாள்களுக்கு முன்பாகவே பிசுபிசுத்துப் போயிருக்கும். ஆனால் வைக்கம் அறப்போருக்கு சென்னையிலிருந்து நிதி மற்றும் தகுதி வாய்ந்த தலைமையும் கிடைத்ததால் ஆதரவு அபரிமிதமாகி விட்டது. **ஈ.வெ.இராமசாமி நாயக்கரின் தலைமை இயக்கத்துக்குப் புத்துயிர் ஊட்டியது.** கேரளாவுக்குப் புறப்படுவதற்கு முன், தமிழக மக்களுக்கு அவர் விடுத்த உணர்ச்சி மிக்க வேண்டுகோள், தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் ஆழப் பதிந்துவிட்டது” என்று எழுதினார் அந்த அதிகாரி. வைக்கம் சத்தியாகிரகம் குறித்து ஆய்வு செய்த பேராசியர் டி.கே. ரவீந்திரன், தனது ஆய்வில் (Vaikam Satyagraha and Gandhi) இதைப் பதிவு செய்திருக்கிறார். வைக்கம் கோயில் வீதிகள் ஈழவர்கள் உள்ளிட்ட தீண்டப்படாதவர்களுக்கு திறந்து விடப்பட்டதைக் கொண்டாடும் வெற்றி விழா நடத்தப்பட்ட நாள் 29.11.1925. அந்த விழாவுக்கு தலைமை தாங்கியவரே பெரியார் தான். பார்ப்பனர்கள் இதற்குப் பிறகாவது தங்களது பார்ப்பனியப் புளுகுகளை நிறுத்திக் கொள்ளட்டும்.

## பெரியார் குறித்து ரவிக்குமார், எம்.பி.

பெரியார் குறித்த கடுமையான விமர்சனங்களை ஒரு காலத்தில் முன்வைத்து வந்தவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளரும் இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிக்குமார். அவரது பேட்டி ஒன்று ‘ஜூனியர் விகடன்’ (26.6.2019) இதழில் வெளி வந்துள்ளது. தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழில் பதவியேற்பு உறுதிமொழியை எடுக்கலாம் என்ற கருத்தை அவர்தான் தெரிவித்ததாக அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். கடைசியாக அவரிடம் ‘ஜூ.வி.’யில் கேட்கப்பட்ட கேள்வியையும் அவரது பதிலையும் கீழே தருகிறோம்.

கேள்வி : பெரியாரை அதிகம் விமர்சித்தவர் நீங்கள். தி.மு.க.வுடனான இந்த இணக்கம் நீடிக்குமா?

இரவிக்குமார்: நான் அடிப்படையில் ஒரு பெரியாரியவாதி. கல்லூரிக் காலத்தில் திராவிடர் கழகத்தின் மாணவரணிச் செயலாளராக இருந்தேன். மதச்சார்பு அரசியல் மேலோங்கும் காலத்தில் நாம் பெரியாரை வாளாகவும் கேடயமாகவும் ஏந்தும் கட்டாயத்தில் இருக்கிறோம்” என்று கூறியிருக்கிறார்.

## அரசு அம்பேத்கர் மய்யத்தில் பார்ப்பனியம்

நடுவண் அரசின் சமூக நீதித்துறை ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்தோருக்கு ரூ.2.5 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கி வருகிறது. இதற்காக அம்பேத்கர் மய்யம் என்ற ஒரு பிரிவு உருவாக்கப் பட்டுள்ளது. திருமணமான இணையர்களில் ஒருவர் பட்டியல் இனப் பிரிவினராக இருத்தல் வேண்டும். நெல்லை, சாத்தூர், நாகர்கோயிலைச் சார்ந்த மூன்று இணையர் ஊக்கத் தொகைக் கேட்டு விண்ணப்பித் திருந்தனர். அம்பேத்கர் மய்ய பார்ப்பன அதிகாரிகள், இந்த இணையர் இந்து சாஸ்திரப்படி புரோகிதர்களை வைத்து திருமணம் நடத்தவில்லை என்று கூறி ஊக்கத் தொகையை வழங்க மறுத்து விட்டனர். சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் வழக்கறிஞருமான ஆர். கிருஷ்ணன், சமூக நலத் துறைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன், தமிழ்நாட்டில் இந்து சாஸ்திரங்களை மறுத்து நடக்கும் சுயமரியாதைத் திருமணத்துக்கு இந்து திருமணச் சட்டத்தில் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி, ஊக்கத் தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார். இந்து சாஸ்திர அதிகாரங்களை மறுக்க வேண்டும் என்று கூறிய அம்பேத்கர் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள அரசு மய்யம் அவரது கொள்கைக்கு எதிராக, ‘இந்து சாஸ்திர’ முறைப்படி நடக்கும் திருமணங்களுக்கே ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று கூறுவது அம்பேத்கருக்கே இழைக்கும் அவமானம். பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணம், அண்ணா முதல்வராக இருந்தபோது சட்டமாக்கப்பட்டுள்ளதால், சுயமரியாதைத் திருமணம் புரிந்து இந்த மூன்று தம்பதிகளுக்கும் ரூ.2.5 இலட்சம் ஊக்கத் தொகை கிடைத்துள்ளது. வேறு மாநிலங்களில் சுயமரியாதைத் திருமணச் சட்டம் இல்லை. திராவிட இயக்கத்தின் சாதனைக்குக் கிடைத்துள்ள வெற்றி இது.

## ‘நீட்’ உருவாக்கும் குளறுபடிகள் – மோசடிகள்

புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவக் கல்லூரி, மத்திய அரசு நிர்வாகத்தில் செயல்படுகிறது. மொத்தமுள்ள 200 மருத்துவக் கல்லூரி இடங்களில் புதுச்சேரியிலேயே வாழ்வோருக்கு 55 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவர்களும் நீட் தேர்வு எழுதி தகுதி பெற வேண்டும். ஆனால் ‘நீட்’ தேர்வு எழுதாமலேயே ‘புதுச்சேரி’யில் குடியிருப்பதாகப் பொய்யான சான்றிதழ்களைத் தந்து 29 பேர் மாணவர் சேர்க்கைக்கான பூர்வாங்கப் பட்டியலில் இடம் பெற்றிருப்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வசிக்கும் இவர்கள் இங்கேயும் ‘நீட்’ தேர்வு எழுதி மருத்துவக் கல்லூரிக்கு மனு போட்டவர்கள். புதுச்சேரி உள்ளூர் மக்களுக்கான கோட்டாவுக்குள் சட்ட விரோதமாக நுழைந்து இடம் பிடிக்க, இந்த மோசடி நடந்திருக்கிறது. நீட்

4ஆம் பக்கம்

## சண்டே கார்டியன் ‘அபாயச் சங்கு’ மிகவும் ஆபத்தான நிலையில் கூடங்குளம் அணுமின் நிலையம்

கூடங்குளம் அணுமின் நிலையம் ஒன்று மற்றும் இரண்டாவது தொகுதிகளில் (யூனிட்) அணு உலைகளின் உறுதித் தன்மையைக் கண்டறியக் கூடிய கண்காணிப்புக் கருவி (Strain Monitoring Equipment) முறையாக செயல்படாமல் முடங்கிப் போயிருக்கிறது என்று உலகப் புகழ் பெற்ற ‘சண்டே கார்டியன்’ பத்திரிகை (ஜூன் 22, 2019) அதிர்ச்சியான தகவலை வெளியிட்டிருக்கிறது. அணு உலையில் நிகழ இருக்கும் செயல்பாட்டுக் குறைவு மற்றும் பாதிப்புகளை முன்கூட்டியே எச்சரிக்கும் கருவி இது. அணுஉலையின் இயங்கும் போக்கு அதில் நிகழும் மாற்றங்களை இந்தக் கருவிகள் வழியாக கண்டறிந்தால்தான் ஆபத்து தடுப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். கூடங்குளம் அணுஉலை நிர்வாகத்துக்கு இந்த ஆபத்தை சுட்டிக்காட்டி, சண்டே கார்டியன் 12 நாள்களுக்கு முன் மின்னஞ்சல் அனுப்பியது. உடனடியாக இந்தக் கருவிகளை முறையாக இயங்க வைக்குமாறு அதில் வலியுறுத்தப் பட்டிருந்தது. இதற்கு எந்த பதிலும் நிருவாகத்திடமிருந்து வரவில்லை. பிறகு ஆலையின் தலைமை தகவல் தொடர்பு அதிகாரி சுனில் ஸ்ரீவத்சலாவின் கவனத்துக்கும் சண்டே கார்டியன் இதைக் கொண்டு சென்றது. தொடர்ந்து அணுசக்தித் துறை சார்ந்த அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. எவரும் இது குறித்து எந்த பதிலும் தரவில்லை என்று ‘சண்டே கார்டியன்’ மிகுந்த அச்சத்தோடு எழுதியிருக்கிறது.

கூடங்குளம் அணுமின் நிலையம் முதல் மற்றும் இரண்டாவது தொகுதி(யூனிட்டு)களின் நீண்டகால செயல்பாடு காரணமாக திறன் குறைந்தவையாகிவிட்டதால். அதன் உறுதிப்பாட்டைக் கணக்கிடும் கருவிகள் செயலிழந்து விட்டதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் கூறுவதாக சண்டே கார்டியன் கூறுகிறது.

அணுஉலை எந்திரக் கட்டமைப்புத் தன்மை குறித்து நேரடியாக தகவல்களைத் தரும் இந்த முக்கிய கருவி செயலிழந்து நிற்பது மிக மிக ஆபத்தானது என்று நிபுணர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். கூடங்குளம் அணுமின் உற்பத்தியின் முதல் யூனிட் 2013இல் தொடங்கப்பட்டு தென்னக மின் தொகுப்போடு இணைக்கப் பட்டிருக்கிறது. இரண்டாவது யூனிட் 2016 ஆகஸ்டில் தொடங்கப்பட்டது.

# “வெற்றி; வெற்றி; யாகம் வெற்றி!”



ஆர்.எஸ்.எஸ்.சில்கூட கடவுள் மறுப்பாளர் இருக்கலாம் என்றால் நம்புவீர்களா? சாவர்க்கர் என்ற ஆர்.எஸ்.எஸ். கொண்டாடும் தலைவர் ஒரு கடவுள் மறுப்பாளர்தான். ஆனால் இந்தியாவை இந்து நாடாக்க வேண்டும் என்று கூறியவர். ஆனால், அ.இ.அ.தி.மு.க. என்ற வேத பக்த ஜன சபாவில் உறுப்பினராவதற்குக் கட்டாயம் கடவுள் பக்தி தேவை. நெற்றியில் குங்குமம், விபூதி கட்டாயம்; முழங்கை வரை வண்ண வண்ண ‘மந்திரக்’ கயிறுகள். எல்லாவற்றையும்விட வேத சடங்குகள். யாகங்களை ‘பிராமண’ புரோகிதர்களைக் கொண்டு நடத்த வேண்டும். உலகத்திலேயே இப்படி ஒரு அரசியல் கட்சியை எங்கும் கண்டுபிடிக்க முடியாது. கட்சி சட்டத் திட்டத்தில் எழுதி வைக்கப்படாத கட்டாயமான விதிமுறைகள் இவை.

‘வேத ஜன சபா’வின் இரட்டைத் தலைவர்களான எடப்பாடி பழனிச்சாமி ஜி, ஓ. பன்னீர்செல்வம் ஜி, பாகவத சுவாமிகள் கட்சியின் 55 மாவட்ட செயலாளர்களுக்கும் மழை வேண்டி வருண பகவானுக்கு ‘யாகம்’ நடத்த உத்தரவிடவே யாகங்களும் வேத மந்திரங்களோடு நடந்து முடிந்திருக்கிறது. யாகம் நடத்தாத சட்டமன்ற உறுப்பினர்களை கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் பதவி நீக்கம் செய்வாரா அல்லது கட்சியின் இரட்டைத் தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் மீது பகவான் நிந்தனையாளர்கள் என்று ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமா என்பது நமக்குத் தெரியாது.

ஆனால் தண்ணீர் பஞ்சத்தை அரசின் கவனத்தில் கொண்டுவர எதிர்க்கட்சியான தி.மு.க. போராட்டம் நடத்தும்போது. ஆளும் கட்சியோ யாகம் நடத்தலாமா? என்று கேள்வி கேட்பவர்களுக்கு சில “அறிவார்ந்த” விளக்கங்களை நாம் பதிலாகக் கூறத் தயார்.

ஆளும் கட்சியான ‘வேத பக்த ஜன சபா’ நடத்தும் யாகம்கூட ஒரு போராட்டம்தான். இதை நீங்கள் நம்ப வேண்டும். இது ‘வருண பகவானுக்கு’ எதிரான தொடர் போராட்டத்தின் மற்றொரு கட்டம். புரோகிதர்கள் சமஸ்கிருதத்தில் ‘வருணனுக்கு’ என்ன கோரிக்கை வைத்தார்கள் என்பது யாருக்கும் புரியாது என்றாலும், அமைச்சர்களின் ‘உள்ளக் குரல்’ மட்டும் நன்றாகவே நமக்கு கேட்கிறது.

“அட, வருணபகவானே! நீ ஏன் எங்களை சோதிக்கிறாய்? உனக்கு புரோகிதர்களை அழைத்து வந்து அவர்களை ‘யாகம்’ நடத்த வைத்தால்தான் மக்களுக்கு மழையைத் தருவாயா? மக்கள் தண்ணீரின்றி தவிப்பதைப் புரிந்து கொள்ளும் சக்தி உனக்குக் கிடையாதா? சூரியனையும் ஒரு ‘பகவானாக்கி’ சூரிய நமஸ்காரம் செய்கிறோம். அவனோ, கடும் வெப்பத்தை உருவாக்கி சுட்டெரிக்கிறான் என்றால், வருணனாகிய நீயும், உன் பங்குக்கு, மழையைத் தடுக்கிறாயா? எத்தனைமுறை யாகம் நடத்தினாலும் அசைய மறுக்கும் நீயும் எங்களைப்போலத்தான் ஆட்சி நடத்துகிறாயா?

கடந்த மாதம் அறநிலையத் துறை வழியாக உனக்குப் புரிந்த வேத மொழியில், உன்னால் ‘ஆதார்’ அட்டை வழங்கப்பட்ட ‘பிராமண புரோகிதர்’களை வைத்துத்தானே யாகம் நடத்தினோம்? கருணை காட்டினாயா?

வானுலகில் உங்களுக்கான ‘சாம்ராஜ்ய’ அமைச்சரவையில் இலாகாக்களையெல்லாம் பிரித்து வைத்துக் கொண்டிருப்பதாக புரோகிதர்கள் இங்கே கூறுவதை நாங்கள் அப்படியே நம்பிக் கிடக்கிறோம். பாதுகாப்புத் துறைப் பொறுப்பையேற்று செயல்படும் உங்கள் ‘வானுலக’க் கடவுளுக்கு எங்கள் புரட்சித் தலைவி உயிரைக் காப்பாற்ற எவ்வளவு யாகம் நடத்தினோம்? எவ்வளவு சடங்குகள்... எவ்வளவு பிரார்த்தனைகள்? ஆனாலும் எங்கள் தலைவியைக் காப்பாற்ற வரவில்லையே!

போகட்டும்! வருண பகவானையே கேட்கிறோம்; காவிரிக்கு புஷ்கரம் நடத்தினோமே! ஏன் காவிரி வறண்டுக் கிடக்கிறது? எதிர்க்கட்சிகள் எங்கள் இயலாமையை கேள்வி கேட்கின்றன. நாங்களோ, உன்னுடைய ‘இயலாமை’யை எதிர்த்து மீண்டும் மீண்டும் கருணை கோரி போராடுகிறோம். இந்தப் போராட்டத்துக்காவது தரை இறங்கி மழையாக வருவாயா, வருணனே!” என்று அமைச்சர்கள் மனக் குரல் பேசுகிறது. அதில் நியாயம் இருக்கிறது.

என்னப்பா இது? வருண பகவானுக்கு மனுப்போடுவதே போராட்டமா என்று சில பக்தர்கள் கேட்கக் கூடும்.

என்ன செய்வது! கோரிக்கை வைத்தால்தான் பரிசீலிப்போம் என்ற நிலைக்கு வருண பகவானே அடம் பிடிக்கிறானே! அடம்பிடிப்போரைப் பணிய வைப்பதற்கு ஒரு யாகம் நடத்தினால் அது போராட்டம் தானே!

சரி, போராட்டம் என்னவாயிற்று? “வெற்றி, வெற்றி; வருண பகவானைப் பணிய வைத்து விட்டோம்” என்று அமைச்சர்கள் ஆனந்த கூத்தாடுகிறார்கள். “யாகத்துக்கு சக்தி இல்லை என்று கூறுவோரைக் கேட்கிறேன்; சமஸ்கிருதத்தில் புரோகிதர் ஓதினால், பகவான் கேட்பார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்” என்று பதிலடி தருகிறார். தமிழை தனது பெயரில் மட்டும் வைத்துள்ள தமிழிசை.

அடுத்து வர இருக்கிற மின் பற்றாக்குறையைப் போக்க எந்த மந்திரத்தை வைத்து எந்த யாகத்தை எந்தக் கடவுளுக்காக நடத்தலாம் என்று தமிழிசை நாட்டுக்குத் தெரிவித்தால் நல்லது.

அதாவது சார், “தட்பவெப்ப சூழலைப் புரிந்து போராட்டம் நடத்த வேண்டும்; தமிழ்நாட்டில் பருவ மழை தொடங்கிவிட்டது என்றும், காற்றழுத்த மண்டலம் உருவாகியுள்ளதால் மிதமான மழை பெய்யலாம்; ஆனால் புயல் வீசாது என்றும் வானிலை ஆய்வு மய்யம் அறிவித்த உடனேயே வருண யாகம் நடத்தினோம்; வெற்றி பெற்று விட்டோம்” என்றார் ஓர் அமைச்சர்.

பரவாயில்லையே; பக்த ஜன சபாவுக்குள்ளும் பகுத்தறிவு வேலை செய்கிறதே!

அது சரி; காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறினால் அப்போது எந்த யாகம் நடத்தி, புயலைத் தடுப்பீர்கள் என்று கேட்கத் தொடங்கினோம்; அவ்வளவு தான், ஆளை விடு என்று ஓட்டமெடுத்தார், திருவாளர் ‘வேத பக்த ஜன சபா’.

**– கோடங்குடி மாரிமுத்து**

# குழந்தைகளை ‘சுமைதாங்கி’களாக்கும் கல்வித் திட்டம்

கஸ்தூரிரங்கன் தலைமையிலான கல்விக் குழு, 2016இல் மத்திய அரசு வெளியிட்ட புதிய கல்விக் கொள்கை முன்வரைவு எனும் ஆவணத்தின் அடிப்படையில், தனது முழுமையான அறிக்கையை 2018 டிசம்பர் 15இல் சமர்ப்பித்துவிட்டது. ஆனால், மே 31 அன்று புதிய அரசு கொள்கை வரைவை வெளியிட்டிருக்கும் மத்திய அரசு, ஜூன் 30 வரை பொதுமக்கள் கருத்து கூறலாம் என அறிவித்துள்ளது. மும்மொழிக் கொள்கை, கட்டாய இந்தி மொழி என உடனடியாக சர்ச்சை கிளம்ப, அந்தப் பகுதிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் கட்டாய இந்தி மட்டுமே பிரச்சினை அல்ல. கஸ்தூரிரங்கன் கல்விக் குழு முன்வைக்கும் அடிப்படைப் பரிந்துரைகள் மீது எழுகின்ற கேள்விகளில் சில...

**பள்ளிக் கல்வி அமைப்பு முறை :** மூன்று வயது தொடங்கி ஏழு வயது வரை ஆரம்பக் கல்வி 5 ஆண்டுகள். அதாவது, பிரீ.கே.ஜி. முதல் இரண்டாம் வகுப்பு வரை ஆதாரக் கல்வி. பிறகு, 3 முதல் 5 வகுப்பு வரை மூன்றாண்டுகளுக்குத் தொடக்கநிலைக் கல்வி. பின்பு, 6 முதல் 8 வரை மூன்றாண்டுகள் நடுநிலைக் கல்வி. 9 வகுப்பு முதல் 12 வரையான நான்காண்டுகள் உயர்நிலைக் கல்வியாக அமைக்கப்படும் (பக்கம் 75, அத்தியாயம் பி4.1.1) என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

உலகின் வளர்ச்சியடைந்த பல நாடுகளில் குழந்தையின் பள்ளி செல்லும் வயது ஐந்து என்று ஏற்கப்பட்டுள்ளது. காந்தியடிகள் முதல் தற்போதைய ஐரோப்பியக் கல்விக் கொள்கை, யுனெஸ்கோ பரிந்துரை உட்பட அனைத்தையும் பின்தள்ளி மூன்று வயது மழலைக்கு 5 ஆண்டுக் கல்வி என அதைப் பள்ளிக் கல்வியோடு இணைப்பது சரிதானா? குழந்தையின் ஆரம்பக் கல்வி தாய்மொழியில் இருக்க வேண்டும் எனும் நீண்ட காலக் கோரிக்கை என்ன ஆனது? இது குறித்து கல்விக் குழு அறிக்கை ஏதும் குறிப்பிடாதது ஏன்?

**9ஆம் வகுப்பிலேயே மேனிலைக் கல்வி :** 8ஆம் வகுப்போடு பொதுக்கல்வி அமைப்பு முடிந்து, வகுப்பு 9 முதல் 12 வரையிலான நான்காண்டுக் கல்வி தற்போதைய மேனிலைக் கல்வி போன்று பாடத் தொகுதிகளாக மாற்றி அமைக்கப்படும். 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை நான்காண்டுகள் எட்டு பருவத் தேர்வுகள் நடத்தப்பட்டு, ஒட்டுமொத்த மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும். தங்களது எதிர்காலத்துக்கான பாடத் தொகுதியை ஒன்பதாம் வகுப்பிலேயே மாணவர்கள் தேர்வு செய்யலாம். சில பாடங்கள் பொதுவானவை. ஆனால், பெரும்பாலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் சிறப்புப் பிரிவுகள் அடிப்படையில் பாடங்கள் அமையும். (பக்கம் 76 அத்தியாயம் பி4.1.1) என்கிறது பரிந்துரை.

தங்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் விருப்பப் பாடத் துறை ஒன்றைத் தேர்வு செய்ய 8ஆம் வகுப்பு முடிக்கும் 13 வயதுக் குழந்தையால் முடியுமா? ஒரு அர்த்தத்தில் 9ஆம் வகுப்பு முதலே பொதுத்தேர்வுபோல உள்ளதே. தற்போது தமிழகத்தில் அறிமுகமாகி உள்ள 11ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு என்பதே கடந்த இரண்டாண்டுகளில் சுமார் ஓர் இலட்சம் மாணவர்களைப் பள்ளிகளை விட்டுக் காணாமல்போக வைத்திருக்கிறதே. 9ஆம் வகுப்பு முதலே தொடங்கும் செமஸ்டர் முறை பள்ளி இடைநிற்றலை அதிகரித்துவிடாதா?

**3ஆம் வகுப்பில் பொதுத்தேர்வு :** 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வோடு கூடுதலாக 3, 5, 8 வகுப்புகளில் அனைத்து மாணவர்களுக்கும் தேசிய அளவில் பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு கல்வித் திறன்கள் பரிசோதிக்கப்பட வேண்டும். அடுத்த வகுப்புக்குச் செல்ல இத்தேர்வுகள் அவசியம். குறிப்பாக, 3ஆம் வகுப்பில் நடத்தப்படும் தேர்வு அடிப்படைக் கல்வி அறிவுக் கணக்கீட்டுத் திறன் மற்றும் ஏனைய கல்வித் திறன்களைப் பரிசோதிக்க உதவும் (பக்கம் 107, பி4.9.4) என்கிறது மற்றொரு பரிந்துரை.

தேசிய அளவில் 6 வயது முதல் 18 வயது வரையில் ஒட்டுமொத்தப் பள்ளி சேர்ப்பு விகிதம் ஆரம்ப வகுப்பில் 95.1% ஆக இருப்பது 2017 கணக்கீட்டின்படி 9, 10 வகுப்புகளில் 79.3% ஆகக் குறைந்து 11, 12 வகுப்புகளில் வெறும் 51% ஆகி விடுகிறது. கல்விக் குழு அறிக்கையின்படி இன்றும் (பக்கம் 65) 6.5 கோடிக் குழந்தைகள் பள்ளி செல்வது இல்லை. மேற்கண்ட (மிரட்டல்) தேர்வுகள் மேலும் குழந்தைகளை வடிகட்டினால், வசதியும் வாய்ப்பும் உள்ளவர்களை மட்டுமே உயர் நிலைக் கல்வி நோக்கிச் செல்ல வைக்கும் அபாயம் உள்ளதே. இது கல்வி உரிமைச் சட்டத்துக்கு எதிரானது இல்லையா?

**தனியாருக்குத் தாராளம் :** இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை 12ஆம் வகுப்பு வரை நீட்டிக்கவும் (பக்கம் 72, பி 3.13) பள்ளிக் கல்வியில் உதவும் மனம் கொண்ட தனியாரை அனுமதிக்கவும் (பக்கம் 71, பி 3.12) பரிந்துரைக்கிறது புதிய கல்விக் கொள்கை.

இலவசக் கட்டாயக் கல்வி என்பது என்ன? 6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு எத்தகைய கட்டணமும் இன்றி தொடக்கக் கல்வியை வழங்குதல் என்பதுதானே? ஆனால், தனியார் பள்ளிகளில் ஆரம்ப வகுப்பில் 25% இடங்களைச் சமூகப் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய பிரிவு குழந்தைகளைச் சேர்த்து, அதன் கட்டணத்தை அரசே செலுத்தும் முறை. இந்தச் சட்டத்தின் மூலம் அமலாகி, ஆண்டுக்கு இரண்டு லட்சம் குழந்தைகளை (தமிழகத்தில் மட்டுமே) நாம் தனியார் பள்ளிகளில் சேர்க்கிறோம். இதனால் மூடப்படும் அரசுப் பள்ளிகள் ஒன்றிரண்டல்ல. கல்வி உரிமைச் சட்டத்தின் உண்மையான அர்த்தப்படி, தரமான கல்வி முற்றிலும் விலையின்றி வழங்கப்பட வேண்டுமானால் தனியாரின் கட்டணக் கல்வியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டாமா?

**ஒரே நாடு... ஒரே பாடத்திட்டம்... :** பள்ளிப் பாடமுறையின்படியான பயிற்றுவிப்பு இந்தியா முழுவதும் ஒரே பாடத்திட்டத்தின்படி அமையும் (பக்கம் 101 பத்தி 4.8) பாடப்புத்தகங்கள் தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (என்சிஇஆர்டி) மூலம் வெளியிடப்படும். மாநிலக் கல்வி நிறுவனங்கள் பாடநூல் தயாரிக்கலாம். ஆனால், என்சிஇஆர்டி பாடத்திட்டப்படியே அவை இருக்க வேண்டும் (பக்கம் 102 ,பத்தி பி 4.8.2) என்று வலியுறுத்துகிறது புதிய கல்விக் கொள்கைக்கான வரைவு.

கல்வியை முழுக்கவும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்ற நீண்ட நாளைய கோரிக்கையை அலட்சியப்படுத்தும் செயல் இது. மேற்கண்ட பரிந்துரை மாநிலங்கள் தங்களது மக்களுக்குத் தாங்கள் விரும்பும் கல்வியை வழங்க முடியாத நிலையை ஏற்படுத்தவில்லையா? இந்தியா புவியியல் கலாச்சார ரீதியில் பலதரப்பட்ட மக்களால் ஆனது. ஒரே பாடத்திட்டம், ஒரே புத்தகம் என்பது வேற்றுமையில் ஒற்றுமை எனும் நம் நாட்டின் அடிப்படையைத் தகர்த்து, ஒரே இடத்தில் அதிகாரத்தைக் குவித்துவிடவில்லையா? இந்தக் கேள்விகள் பள்ளிக் கல்வி தொடர்பாக எழுபவை. உயர்கல்வித் துறைக்கான பரிந்துரைகள் குறித்தும் விவாதிக்க நிறையவே இருக்கிறது.

**– ஆயிஷா இரா. நடராசன், பள்ளித் தலைமையாசிரியர், எழுத்தாளர்.**
**– ‘தமிழ் இந்து’விலிருந்து**

# இராஜராஜசோழனின் கதை என்ன? (2)

# சேரிகள்–அடிமைகள்–விபச்சாரம் செழித்தது

***இயக்குநர் இரஞ்சித், இராஜராஜசோழன் குறித்துப் பேசியதற்காகப் பார்ப்பன இராஜாக்களும், 'அவாளின் எடுபிடி'களான, 'சூத்திர' இந்து முன்னணிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து, இரஞ்சித்தை கைது செய்ய வேண்டும் என்று ஓலமிடுகின்றன. நீதிமன்றங் களும் இராஜராஜசோழனைப் பற்றிப் பேசுவதா என்று கவலைப்படுகின்றன. இராஜராஜ சோழனின் வரலாறுதான் என்ன?***

பார்ப்பனரைத் தவிர அனைத்துத் தரப்பினரும் தத்தம் ஊர்களுக்கு அரசு ஏற்பாடு செய்திருந்த காவலுக்கென்று 'பாடி காவல் வரி' செலுத்தினர். கைத்தொழில் செய்வோர் ஒவ்வொரு தொழிலுக்கும் வரி (இறை) செலுத்த வேண்டி இருந்தது. நெசவாளர் 'தறி இறை'யும், எண்ணெய் பிழிபவர் 'செக்கு இறை'யும், தட்டார், தட்டாரப்பாட்டத்தையும், தச்சர், 'தச்சு இறை'யும் வரிகளாகச் செலுத்தினர். மக்களிடமிருந்து புரவு, இரவு, குடிமை, திருமணவரி, போர்வரி எனப் பல வரிகளை அரசு வசூலித்த அதே நேரத்தில், ஊர், சபை போன்ற அமைப்புகளும் தனியாக வரி விதித்தன. இவ்வாறு விதிக்கப்பட்ட 400க்கும் மேற்பட்ட வரிகளில் பெரும்பாலானவை, பார்ப்பன, வெள்ளாள சாதி தவிர்த்த பிற சாதியினரிட மிருந்துதான் வசூலிக்கப்பட்டன.

விவசாயிகள், விளைச்சலில் ஆறில் ஒரு பங்கை வரியாக செலுத்த வேண்டியிருந்தது. அந்த வரிக்குக் 'கடமை' எனப் பெயரிட்டதன் மூலம் அரசுக்கு நெல் கொடுப்பது உழவர்கள் வாழ்வின் நிரந்தரமான கடமையாக்கப்பட்டிருந்தது. இந்த வரியைச் செலுத்தத் தவறினால், நிலம் பிடுங்கப்பட்டு, அந்த நிலம் ஊர்ப் பொதுவாக்கப்பட்டது. மக்கள் பலர் பஞ்சத்தாலும் வறுமையாலும் வாடியுள்ளனர். வரிகொடுக்க இயலாதோரின் நிலங்கள் ஈவிரக்க மின்றிப் பறிமுதல் செய்யப்பட்டன. ஊர்களே அதனை விற்றுப் பணத்தை வரியாக (இறை)க் கட்டின. நிலத்தைப் பறித்தல்தான் அன்றைய சமூக அமைப்பில் மிகப் பெரிய தண்டனையாக இருந்தது.

சோழர் ஆட்சிக் காலத்தில் அடிமை முறை இருந்துள்ளதையும் வறுமையினால் மக்கள் தம்மை கோவிலுக்கு அடிமையாக விற்றுக் கொண்டதையும் கல்வெட்டு ஆதாரங்கள் காட்டுகின்றன. ஆறு பேர் பதின்மூன்று காசுகளுக்குத் தம்மைப் பெரிய கோவிலுக்கு விற்றுக் கொண்டுள்ளனர். நந்திவர்ம மங்கலத்தில் பதிகம் பாடுவதற்காக 3 பெண்கள் பரிசளிக்கப்பட்டனர். திருவிடந்தைப் பெருமாள் கோவில் எனும் ஊரிலுள்ள ஸ்ரீவராகதேவர் கோவிலுக்கு 12 மீனவர் குடும்பத்தினர் தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டிருக்கின்றனர். இதே போல நெசவாளர்களும் கோவிலுக்கு அடிமைகளாக தம்மை விற்றுக் கொண்டுள்ளனர். இவ்வடிமைகள் தங்களின் தொழில் மூலம் வரும் வருவாயில் களஞ்சுப் பொன், கோவிலுக்குத் தர வேண்டும் என்றும், ஆண்டுக்கு இருமுறை வரும் கோவில் திருநாட்களில் பணிகள் செய்யவேண்டும் என்றும் விதிகள் இருந்தன.

பார்ப்பனர் அல்லாதோரின் பஞ்சாயத்து ஆதிக்கத் திலுள்ள கிராமங்களை 'ஊர்கள்' என்றழைத்தனர். 'ஊர்களின்' நில உரிமைகளை மாற்றியும், கோயிலுக்குக் குடிகள் கொடுக்க வேண்டிய காணிக் கடனை அதிகரித்தும் இராஜராஜன் கட்டளைப் பிறப்பித்தான்.

தங்கள் தேவைக்கென சிறு அளவில் வேளாண்மை செய்து வந்தவர்களின் நிலங்கள் அவ்வப்போது ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்டு, அந்த உழவர்களைக் கூலியாக மாற்றியோ ('குடி நீக்கியோ'), குத்தகையாளராக மாற்றியோ ('குடி நீக்காமலோ'), அவர்களின் நிலங்கள் கோயிலுக்குச் சொந்தமாக்கப்பட்டன.

அரசனுக்கும், கோயிலுக்குமான பங்கான 'மேல்வாரமும்', குத்தகைதாரர்களின் பங்கான 'கீழ்வாரமும்' எடுக்கப்பட்டபின், ஊர் அறிவித்துள்ள மானியங்களை உரியவர்களுக்குக் கொடுத்த பின்பு எஞ்சியதே உழவர்களுக்குக் கிடைத்தது. இது விளைச்சலில் பத்தில் ஒரு பங்கை விடக் குறைவானது. 'மேல்வார'மாக செலுத்த வேண்டிய விளைச்சல் ஏற்கெனவே அதிகமாக இருந்ததுடன், அடிக்கடி இந்த அளவு உயர்த்தப்பட்டுக் கொண்டே போனதால் உழுபவர்க்குக் கிடைக்கும் பங்கு குறைந்து கொண்டே போனது.

இதனால் நில உடைமையாளருக்கு (கோயில்தான் உடைமையாளர்) அஞ்சி உழுகுடிகள் ஊரைவிட்டு ஓடியுள்ளனர். **வரி அதிகமாகப் பிடுங்கியதால்**



> திருவிடந்தைப் பெருமாள் கோவில் எனும் ஊரிலுள்ள ஸ்ரீவராகதேவர் கோவிலுக்கு 12 மீனவர் குடும்பத்தினர் தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டிருக்கின்றனர். இதே போல நெசவாளர்களும் கோவிலுக்கு அடிமைகளாகத் தம்மை விற்றுக் கொண்டுள்ளனர்.

**தாங்கள் வெள்ளாமை செய்து குடியிருக்கப் போவதில்லை என மன்னார்குடி மக்கள் எச்சரிக்கையும் விட்டுள்ளனர்.** சாகுபடி செய்யாது கிடந்த நிலங்களுக்கும் வரி இருந்தது. அதை வசூலிக்கத் தவறிய புன்னைவாயில் எனும் ஊர்ச்சபை தண்டிக்கப்பட்டிருந்தது.

ஊரார் சிலரே வரி நெல்லைக் குறைத்து அளப்பதற்காக, தமது ஊர்நிலத்தில் வரி விலக்குப் பெற்றிருந்த (இறையிலி) நிலங்களின் அளவைக் கூடுதலாகக் கணக்குக் காட்ட முயன்றிருக்கின்றனர். சொந்த நிலமுடையவர்கள் கூட தங்கள் நிலத்தை வரியில்லா நிலங்கள் எனக் கணக்குக் காட்டி அனுபவித்து வந்தனர். கோயிலின் சுரண்டலில் இருந்து எவ்வாறெல்லாம் தப்பலாம் எனத் திட்டமிட்ட குடிமக்கள், மகிழ்ச்சியுடன் வரி செலுத்தி இருக்கக்கூடுமா?

பார்ப்பனர்கள் நிறைந்துள்ள ஊர்களில் மற்ற சாதியினர் யாரும் நிலவுடைமையாளராக இருப்பின் அவர்கள் நிலங்களை விற்றுவிடச் சொல்லி இராஜராஜன் ஆணை பிறப்பித்தான். அந்நிலங்களை இராஜராஜனின் தமக்கை குந்தவை விலைக்கு வாங்கி கோயிலுக்கு சொந்தமாக்கினாள். இவ்வாறாக பார்ப்பனர் ஊர்களில் பார்ப்பனரல்லாதோரின் நில உரிமை பறிக்கப்பட்டு அவர்கள் உழு கூலிகளாகத் தாழ்த்தப்பட்டனர்.

இவ்வாறு கோயிலைச் சார்ந்து பிறப்பிக்கப்படும் நிலப்பறிப்பு, வரி விதிப்பு போன்ற ஆணைகளை யாரேனும் உழவர்கள் எதிர்த்தால் அவர்கள், 'சிவத் துரோகி' எனப் பட்டம் கட்டி அடக்கப்பட்டனர்.

விவசாயத் தொழிலாளர்கட்கு நெல் கூலியாக அளக்கப்பட்டது. நெல் அளப்பவரின் பதவிப் பெயர் 'கருமி'. இன்றளவும் அச்சொல் மக்கள் மத்தியில் கஞ்சத்தனத்திற்கு மாற்றாகச் சொல்லப்படுவதி லிருந்தே சோழர் காலத்தில் தொழிலாளர்கள் எவ்வாறெல்லாம் வயிற்றில் அடிக்கப்பட்டிருப்பர் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

### சேரிகள், அடிமை விபச்சாரம்: இராஜராஜ சோழனின் சாதனை!

இராஜராஜன், 400க்கும் மேற்பட்ட பெண்களை வலுவில் கொணர்ந்து உடம்பில் சூடு போட்டு 'தேவரடியார்களாக' மாற்றினான். இப்பெண்கள் கோயிலின் பணிகளோடு நிரந்தரமாகப் பிணைக்கப் பட்டனர். இறைவனின் பெயரால் விபச்சாரத்தைப் புனிதமாக்கி தஞ்சையில் 'தளிச்சேரி'யை உருவாக் கினான். கோவில் அடிமைகளென கட்டாயப்படுத்தி இழுத்து வரப்பட்ட இப்பெண்கள், அரசனின் அந்தப் புரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட கொடுமைகளும் சோழப் பொற்காலத்தில்தான் நிகழ்ந்தன. கோயில் பூசகர்கள், பெருநிலவுடமையாளர்களின் காம வெறிக்குப் பலி கொடுக்கப்பட்ட 'தேவரடியார்' குலப் பெண்களின் ஆயிரம் ஆண்டுகாலக் கொடுமையை 1929இல் சுயமரியாதை இயக்கமும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் போராடி சட்டம் மூலம் முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

'தமிழ்மறை மீட்டான்' என சைவக் கொழுந்து களால் போற்றப்படும் இராஜராஜன், தமிழ் மறைகளை ஒளித்து வைத்துக் கொண்டு சமயக்குரவர் நால்வரும் வந்து கேட்டால்தான் தருவோம் என தில்லை தீட்சிதர்கள் மிரட்டியபோது பம்மிப் பதுங்கி சமயக்குரவர்களின் தங்கச் சிலைகளைச் செய்து அவர்களுக்குத் தானம் தந்து மீட்டானே ஒழிய, தளிச்சேரிப் பெண்டிர் மீது 'சூடு' போட்ட 'வீரத்தை' தீட்சிதரிடம் காட்டவில்லை.

தமிழ்நாட்டில் கிடைத்த கல்வெட்டுக்களில் தீண்டாமை பற்றிய முதல் குறிப்பே இராஜராஜனின் ஆட்சிக் காலத்தில் வந்துள்ளது. வரலாற்று அறிஞர் ரொமிலா தாப்பர், இவன் காலத்தில் ஊருக்கு வெளியே தீண்டாச்சேரியும், பறைச்சேரியும் இருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஒவ்வொரு சாதிக்கும் தனித் தனிச் சுடுகாடுகள் இருந்தன.

தாழ்த்தப்பட்ட சாதி அடிமைகள் சாகுபடி நாட்களில் சகதியில் உழல்வதும் மற்ற நேரங்களில் கல்லுடைப்பதும், பல்லக்கு சுமப்பதும் கட்டாய மானது. இராஜராஜனின் பொற்காலம் பற்றிப் பேசுபவர்கள் அவன் காலத்தில் இருந்த தீண்டாமைக் கொடுமையைப் பற்றியோ, சாதிகளால் மக்கள் பிரிந்து கிடந்ததைப் பற்றியோ பேசுவதே இல்லை.

கோயிலை மையமாகக் கொண்ட சோழர் கால அதிகார அமைப்பில் சாதிவாரிக் கடமைகளும் உரிமைகளும் வரையறுக்கப்பட்டன. பார்ப்பன, வெள்ளாள நிலவுடைமை ஆதிக்க சாதிகள் ஒருபுறமும் விவசாயத் தொழிலாளிகள், அடித்தட்டு உழைப்பாளர் மற்றும் உடைமை, உரிமை அற்ற சமூக அடிமைகளாக கடைச் சாதி தீண்டப்படாதோர் மறுபுறமுமாக சமூகமே பிரிந்து கிடந்தது.

**(தொடரும்)**



## கவரபாளையத்தில் ஜாதி மறுப்பு இணையர்கள் அறிமுக விழா




ஆண்டி மடம் கழகத் தோழர் இராவணகோபால் தாயார் சரோஜா அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாள் 22.6.2019 அன்று கவரப்பாளையம் வெங்கடேசுவரா திருமண மண்டபத்தில் மாலை 6 மணியளவில் நடைபெற்றது. நினைவு நாளில் ஜாதி – தாலி எதிர்ப்புடன் ஏற்கெனவே மறுமணவிழா நடத்திக் கொண்ட இரா. இராவணகோபால்–நா. கோமதி மற்றும் இராவண கோபாலின் அண்ணன் மகள் ப. ஓவியா–இரா. விஜயகுமார் இணையர்களின் மணவிழா அறிமுக நிகழ்வும் நடந்தது. மறுமணத்தை முன் மொழிந்து ஏற்பாடு செய்த கோமதியின் மகன் மாணவர் கழகத் தோழர் பிரபாகரன் (படத்தில் கோமதியின் அருகில் நிற்பவர்) ஆவார். தி.க. மண்டல செயலாளர் தி. காமராஜ் தலைமையில் நடந்த நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினார். முன்னதாக நாத்திகனின் 'மந்திரமல்ல தந்திரமே' அறிவியல் நிகழ்ச்சி நடந்தது. செ.பூ. அறிவழகன் (தி.மு.க.), க.நா. ஆராவமுதன் (தி.மு.க.) முன்னிலை வகித்தனர். பத்மநாபன், வழக்குரைஞர் துரை. அருண், சு. வெங்கடேசன், தியாக முருகன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். இரா.எ. இராமகிருட்டிணன் நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மாநகராட்சிப் பள்ளிக்கு துரோணாச்சாரி பெயரா? திருப்பூரில் கடும் எதிர்ப்பு



திருப்பூர் இராயபுரம் பகுதியிலுள்ள புதுப்பிக்கப்பட்ட மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு துரோணாச்சாரி நினைவாக ‘துரோணா’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதற்கு ஊர் மக்களிடம் கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது. ஏகலைவன் என்ற பழங்குடி சமூகத்தைச் சார்ந்தவர். துரோணாச்சாரி உருவம்போல் பொம்மை செய்து குருவாகக் கருதி வில்வித்தை கற்றார் என்பதற்காக அவரது கட்டை விரலைக் காணிக்கையாகக் கேட்டு வாங்கினார் துரோணாச்சாரி என்று மகாபாரதம் கூறுகிறது. ‘சூத்திரன்’, அவர் ‘குலதர்மத்துக்கு’ எதிராக வில்வித்தை கற்கக் கூடாது என்பது இதன் தத்துவம். ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ வீட்டுப் பிள்ளைகள் படிக்கும் மாநகராட்சிப் பள்ளிக்கு ‘துரோணாச்சாரி’ பெயர் சூட்டுவது பச்சை வர்ணாஸ்ரம வெறிப்போக்காகும். இந்தப் பெயரை நீக்கக் கோரி, இராயபுரம் பகுதி மக்கள் அனைத்துக் கட்சியினரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளனர். இந்தக் குழுவில் கழகப் பொருளாளர் சு. துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, மாவட்ட செயலாளர் நீதிராசன் மற்றும் த.பெ.தி.க., ம.தி.மு.க., பு.இ.ம., தி.மு.க. அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும் இடம் பெற்றுள்ளனர். முதல் கட்டமாக ‘துரோணா’ என்ற பெயரை நீக்கி ‘மாநகராட்சி நடுநிலைப் பள்ளி’ என்ற பெயரையே மீண்டும் சூட்டக் கோரி ஜூன் 24 அன்று, மாவட்ட ஆட்சியாளர், மாவட்டக் கல்வியாளர், தலைமை ஆசிரியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தேர்வு எழுதாமலே குறுக்கு வழியில் மருத்துவக் கல்லூரியில் நுழையும் மோசடியை சில பெற்றோர், ஆசிரியர் அமைப்புகள் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து, ஜிப்மர் தலைமை மருத்துவர் ஆர்.பி. சாமிநாதன், தவறு நடந்திருந்தால் அதை சரி செய்வோம் என்று கூறியிருக்கிறார்.

நீட் தகுதிக்கான தேர்வு என்று கூறப்படும் வாதத்தில் கடுகளவும் உண்மையில்லை என்பதற்கு சான்றாக ஏராளமான அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இயற்பியல், வேதியலில் பூஜ்யம் மதிப்பெண் பெற்ற மாணவர்கள்கூட பஞ்சாப் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் தகவல்களைக் கடந்த ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் வெளியிட்டிருந்தோம். தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலேயே இந்த மோசடிகள் நடந்துள்ளன. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான ‘நீட்’ கட்-ஆப் மதிப்பெண் 250 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், ‘நீட்’ தேர்வில் 96 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள்கூட சுயநிதி கல்லூரிகளுக்குரிய நிர்வாகக் கோட்டாவின் கீழ் சேர்ப்பதற்கு தமிழக அரசு தேர்வுக் கமிட்டி அனுமதித்திருக்கிறது. இயற்பியல், வேதியல், உயிரியல் தேர்வுகளில் தவறான விடை எழுதி மதிப்பெண் குறைப்புக்குள்ளான மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் கடந்த ஆண்டு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பாடத்திலும் தோச்சிக்குரிய மதிப்பெண்களையாவது பெற்றிருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளாமல் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கப்பட்டு நீட்டே கேலிக் கூத்தாக்கப்பட்டிருக்கிறது. அரசு நிர்ணயித்த ‘கட் ஆப்’ மதிப்பெண் பெற்றிருந்தாலும்கூட நிகர்நிலைப்ப பல்கலைக்கழகங்களில் நிர்வாக ஒதுக்கீட்டில் அவர்கள் கேட்கும் மிகப் பெரும் கட்டணத் தொகையைக் கட்ட முடியாத மாணவர்கள், மருத்துவக் கல்லூரியில் சேர முடிவதில்லை. தகுதி மதிப்பெண் பெறாதவர்கள் பணக்காரர்களாக இருந்தால் போதும் இடம் கிடைத்து விடும்.

## ‘ஜெய் ஸ்ரீராமன்’ கதை கேட்டால்....

பாரதிய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்த பிறகு ‘ஜெய் ஸ்ரீராம்’ முழக்கத்தை முன்னிலைப்படுத்தி வருகிறது. ‘பெரியார் வாழ்க; தமிழ் வாழ்க’ என்ற தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழக்கத்துக்கு எதிராக பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்களே ‘ஜெய் ஸ்ரீராம்’ என்ற முழக்கத்தை முன் வைக்கிறார்கள்.

‘இராவண-இராம’ யுத்தம் நடந்த காலத்தில் இராமன் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே ‘ஜெய் ஸ்ரீராம்’ என்று கூறி அயோத்தி மக்கள் வேண்டினார்கள் என்பது ஒரு செவி வழிக் கதை. இராமன் போரில் வென்று சீதையையும் இராவணனிடமிருந்து மீட்டான் என்று இராமாயணம் கதை கூறுகிறது. இராமன் வெற்றி பெற்ற பிறகும் இப்போதும் ‘ஜெய் ராம்’ என்று ஏன் முழங்குகிறார்கள்; இப்போது ‘ஸ்ரீராம பகவானுக்கு’ என்ன ஆபத்து நேர்ந்திருக்கிறது? சீதையை யார் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார்கள்?

ஆனாலும், காலங்காலமாக இராமாயணம் - பாரதம் என்ற புராணக் கதைகள், பார்ப்பனரல்லாத மக்களை மூளைச் சலவை செய்து, வேத மதப் பிடிக்குள் வைத்திருப்பதற்கே ‘இராமகாதை’, ‘இராம காலட்சேபம்’, இராமாயண நாடகங்களாகக நடத்தப்படுகின்றன. 10 நாள்கள், 15 நாள்கள், ‘இராமாயண உபன்யாசகங்கள்’ தமிழ்நாட்டில் நடந்தது உண்டு. இறுதி நாள்களில் ‘இராமன் பட்டாபிஷேகக்’ கதைகளை உருக்கமாகப் பேசி, மக்களை கண்ணீர் சிந்த வைப்பார்கள். உபன்யாசகக்காரர்களுக்கு பட்டாபிஷேக உரை நாளில் பொன், பொருள், பட்டாடைகள் பரிசுகளாகக் குவியும்.

இப்போதும் வடமாநிலங்களில் ‘இராமகாதை’ நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் தான் பெரியார் இயக்கப் பிரச்சாரத்தால் இந்த காலட்சேபங்கள் குறைந்திருக்கின்றன. இராஜஸ்தான் மாநிலம் பார்மர் மாவட்டம் ஜபோல் கிராமத்தில் கடந்த 23ஆம் தேதி ‘இராம காதை’ நிகழ்ச்சி நடந்தபோது திடீரென பலத்த சூறாவளிக் காற்று வீசியதால் ‘துணிப் பந்தல்’ சரிந்து விழுந்து, கதை கேட்க வந்த 14 பேர் பரிதாபமாக பலியாகி விட்டார்கள். பந்தல் சரிந்தபோது மின்சாரமும் தாக்கியிருக்கிறது. 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ‘ஸ்ரீராம ஜெயம்’ என்று பக்கம் பக்கமாக எழுதும் ஒரு பழக்கத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள். ‘ஸ்ரீராம ஜெயம்’ எழுதுவதையே சிலர் தெய்வீகப் பணியாகவும் கருதுகிற மனநிலை இன்றும் தொடருகிறது. ‘இராமனுக்கு’ வெற்றி கிடைக்குமா கிடைக்காதா என்பது ஒருபுறம் இருக்கட்டும். இராமன் கதையை பக்தியுடன் கேட்க விரும்புகிறவர்களுக்கு உயிருக்குப் பாதுகாப்பு இருக்குமா இல்லையா என்பதையே இராஜஸ்தான் சம்பவம் உணர்த்துகிறது.

**தொகுப்பு: ‘இரா’**

# ஜாதியை உறுதிப்படுத்தும் குலதெய்வ வழிபாடு

கிராமக் கோயில்கள் குலதெய்வங்கள் - பார்ப்பன ஆகமங்களுக்கு எதிரானவை என்றும் அவை பண்பாட்டு அடையாளங்கள் என்றும் நாட்டார் வழிபாட்டு முறைகளை சில ‘முற்போக்கு’ பேசும் சிந்தனையாளர்கள்கூட நியாயப்படுத்துகிறார்கள். ஆனால் இந்த நாட்டார் வழிபாடு, ஜாதியவாதிகளின் பிடிக்குள் சிக்கி ஜாதிக் கட்டமைப்பை உறுதிப் படுத்தி வருவதோடு, கிராமங்களில் ஜாதி மோதல்களுக்கும் காரணமாக இருக்கிறது. இவை பார்ப்பனியத்துக்கு வலிமை சேர்த்து வருகின்றன. மதுரை மாவட்டம் மேலூர் அருகே 65 கிராமங்களைக் கொண்ட ‘வெள்ளலூர் நாடு’ எனும் பகுதி, ஆதிக்க ஜாதியினரான கள்ளர்கள் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இந்தப் பகுதியில் உள்ள மூன்று கோயில்களை கள்ளர் சமூகத்தினர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். ‘அம்பலத்துக்காரர்கள்’ என்ற நாட்டாண்மைக்காரர்கள், கோயிலை நிர்வகிக்கிறார்கள். இந்தக் கோயில் சொத்துகளும் கோயில் பணமும் முறைகேடாக அம்பலத்துக்காரர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று அம்பலத்துக்காரர் பதவிக்கு வர முயன்று தோற்றுப்பான ஒருவர் அறநிலையத் துறைக்கு புகார் தந்தார். விசாரணையில் முறைகேடுகள் நடப்பதைக் கண்டறிந்த அறநிலையத் துறை, தனது கட்டுப்பாட்டின்கீழ் கோயில்களைக் கொண்டுவர முடிவு செய்தது. ஆனால், 65 கிராம மக்களும் ஜாதி அடிப்படையில் ஒன்று சேர்ந்து கோயில், தங்கள் சமூகத்துக்கே பரம்பரை பரம்பரையாக உரித்தானது என்றம், அறநிலையத் துறை எடுக்கக் கூடாது என்றும் மிரட்டி வருகின்றனர். பல பெண்கள், ‘சாமி’ வந்து ஆடி தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றனர். ‘நாடு’ என்ற ஜாதிக் கட்டமைப்பு இத்தகைய கோயில்கள் வழியாக மேலும் உறுதியாகி வருகிறது.

ஜாதிக் கட்டமைப்பு வலிமையாக இருப்பதுதான் பார்ப்பனர்களுக்கான வலிமை. இந்த குல தெய்வங்களை எப்படி தமிழர் பண்பாட்டு அடையாளமாக ஏற்க முடியும்?

## கழகக் கட்டமைப்பு நிதி

**மதுரை மாவட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மருத்துவர் சௌந்திர பாண்டியன் | - | ரூ. | 20,000 |
| 2. | காமாட்சி பாண்டி தி.வி.க | - | ரூ. | 10,000 |
| 3. | தளபதி | - | ரூ. | 5,000 |
| 4. | அழகர் பிரபாகரன் - தி.வி.க. | - | ரூ. | 4,000 |
| 5. | நாக பாலன் | - | ரூ. | 2,000 |
| 6. | செயராமன் | - | ரூ. | 1000 |
| 7. | விசு - ஆடிட்டர் | - | ரூ. | 1000 |
| 8. | ராஜா - சிம்மக்கல் | - | ரூ. | 1000 |
| 9. | விஜயன் - சமூக நீதி பண்பாட்டு மையம் | - | ரூ. | 1000 |
| 10. | கருப்பையா | - | ரூ. | 1000 |
| 11. | சான் பெனடிக் - திருப்பரங்குன்றம் | - | ரூ. | 500 |
| 12. | விஜய் - சிம்மக்கல் | - | ரூ. | 500 |
| 13. | டேவிட் | - | ரூ. | 500 |
| 14. | குமரேசன் | - | ரூ. | 500 |
| 15. | மா.பா.மணியமுதன் - தி.வி.க | - | ரூ. | 500 |
| 16. | அறக்கலம் You tube Chanal | - | ரூ. | 1,000 |
| 17. | இராசாசி, திருநகர் | - | ரூ. | 1,000 |

மொத்தம் - ரூ. 50,500 (ரூபாய் ஐம்பதாயிரத்தி ஐநூறு மட்டும்) மேற்கண்ட தொகை பால்.பிரபாகரன் மூலம் 17.06.2019 அன்று பொருளாளர் சு.துரைசாமியிடம் வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம் திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் கட்டமைப்பு நிதி ரூ.22,000/-த்தை, கழகப் பொறுப்பாளர்கள் கூடுவாஞ்சேரி தினேஷ், ரவிபாரதி, தெள்ளமுது ஆகியோர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினர்.

21.06.2019 காலை ஏற்காடு தி.வி.க.வின் கட்டமைப்பு நிதி ரூ.40,000/- கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் ஏற்காடு கழக சார்பில் பெருமாள் தலைமையில் வழங்கப்பட்டது.

# குன்னத்தூரில் காவல்நிலைய வளாக கோயில் சிலை அகற்றம்

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் காவல் நிலைய வளாகத்தில் சட்ட விரோதமாக விநாயகர் கோயில் கட்டி வழிபட்டு வந்த நிலையில், திராவிடர் விடுகலைக் கழகக் குன்னத்தூர் நகரப் பொறுப் பாளர் சின்னச்சாமி தலைமையில் தோழர்கள் 20.6.2019 அன்று குன்னத்தூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தனர்.

விநாயகர் சிலை அங்கிருந்து உடனடியாக அகற்றப்பட்டது. மேலும், கோயில் கட்ட எழுப்பிய சுவரும் அகற்றப்பட்டு, காவல் நிலைய பயன்பாட்டிற்குப் பயன்படுத்தவும் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

## நன்கொடை

திருவிடை மருதூர் வட்டம், அனக்குடி (அஞ்சல்), அம்மன் பேட்டை கிராமம் இரா.ராஜ்குமார்- எழிலரசி இணையருக்கு 15.06.2019 அன்று ஆண் மகன் வெற்றிச்செல்வன் பிறந்துள்ள மகிழ்வுக்காக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதிக்கு ரூ. 1000/- வழங்கியுள்ளார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th June 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN